ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2350/51 - 2023 සැප්තැම්බර් මස 22 වැනි සිකුරාදා - 2023.09.22

2350/51 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகிய நான், குறித்த சபைக்கு றுவன்வெல்ல நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் இபுலான நீர்த்தாங்கிக்கு செல்வதற்கான பாதையை நிர்மாணிப்பதற்காக மேலதிகக் காணிப்பகுதி ஒன்றினைச் சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதிகளின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.

**ஜீவன் தொண்டமான்,**
நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு
வசதிகள் அபிவிருத்தி அமைச்சர்.

தொடர்பு இல.: DVP/02/04/KE/539.
நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு
வசதிகள் அபிவிருத்தி அமைச்சு,
இல. 35, “லக்திய மெதுர”,
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2023, செத்தெம்பர் 18.



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

*கேகாலை மாவட்டத்தின், றுவன்வெல்ல பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 100-B, சியபலாவல கிராம அலுவலர் பிரிவில், சியபலாவல கிராமத்தில் அமைந்துள்ள பிடர்ஹில் எஸ்டேட் என்றழைக்கப்படுகின்ற காணியிலிருந்து சுமார் 06 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.*

வடக்கு : குறித்த காணியின் எஞ்சியுள்ள பகுதி ;
கிழக்கு : பாதை ;
தெற்கு : குறித்த காணியின் எஞ்சியுள்ள பகுதி ;
மேற்கு : குறித்த காணியின் எஞ்சியுள்ள பகுதி.

*காணிக்கு உரிமை கோருபவர்களின் பெயரும் முகவரியும் :* B. தர்மலதா,
தஹம்சிறி மாவத்தை,
சியபலாவல,
இபுலான.

EOG 09-0205